# ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ
**ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD**
**Malleshwaram, Bengaluru – 560 003**

## 2023-24ರ ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆಪತ್ರಿಕೆ
## S.S.L.C. MODEL QUESTION PAPER – 2023-24

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
## Subject : First Language — TAMIL

ಸಮಯ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷಗಳು ] **ವಿಷಯ ಸಂಕೇತ : 10-T**

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] **Subject Code : 10-T**

**CCE-RF : ಶಾಲಾ ವಿದ್ಯಾರ್ಥಿಗಳು / Regular Fresh**

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

[ Turn over

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : 6 × 1 = 6**

1. நனியுண்டு, நனியுண்டு

   (A) அடுக்குத்தொடர் (B) இரட்டைக் கிளவி

   (C) இடைச்சொல் (D) வினைச்சொல்.

2. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுதல்

   (A) வெற்றி

   (B) வாகை

   (C) உழிஞ்சை

   (D) வஞ்சி

3. கார் அறுத்தான்

   (A) இடவாகுப் பெயர்

   (B) பொருளாகுப் பெயர்

   (C) காலவாகுப் பெயர்

   (D) சினையாகுப் பெயர்

4. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது

(A) அணி

(B) சொல்லணி

(C) பொருளணி

(D) உவமையணி

5. கண்ணன் பாடினான். இத்தொடரில் பாடினான் என்பது

(A) இறந்தகாலம்

(B) நிகழ்காலம்

(C) வருங்காலம்

(D) எதிர்காலம்

6. செய்யுளில் நான்கு சீர்களைப் பெற்று வருவது

(A) சிந்தடி

(B) குறளடி

(C) அளவடி

(D) நெடிலடி.

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :**

**4 × 1 = 4**

7. தென்னங் கீற்று;

   பனை : ........................... .

8. நல் அமுது தமிழ்மொழி;

   என்னுடைய நாடு : ........................... .

9. செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை;

   செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது : ........................... .

10. மகாகவி பாரதியார்;

    புரட்சிக்கவி : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. இறைவன் ஆனந்தமா கடலாவது எப்போது ?

12. சாறு என்றும், பேறு என்றும் குறிப்பிடுவது யாது ?

13. புறத்தினில் கருத்த காந்தி யார் ?

14. செய்யுளின் உறுப்புகள் யாவை ?

15. சீதை அனுமனிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

16. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

17. இளைஞனின் நண்பன் எது ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

19. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

20. பெண்கள் எவ்வாறு கும்மியடித்தனர் ?

21. காளைகளுக்குச் சொல்வதுபோல் மக்களுக்குப் பட்டுக்கோட்டையார் கூறுவது என்ன ?

22. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மை யாது ?

23. மேலை நாடுகளில் உரையாடல்கலை எவ்வாறு போற்றப்படுகிறது ?

[ Turn over

24. முதலைக் குகையின் சிறப்பம்சம் என்ன ?

25. அணி என்றால் என்ன ?

26. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

27. அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை எழுதுக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $4 \times 3 = 12$**

28. தாய், தந்தை, கொல்லன், அரசன் மற்றும் மகன் செய்ய வேண்டிய கடமைகளைப் பொன்முடியார் வழிநின்று விளக்குக.

29. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப்பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

30. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

31. சூரிய உதயத்தை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார் ?

**VI. குறிப்பு வரைக :** **2 × 3 = 6**

32. கவியரசர் கம்பர்.

33. புறநானூறு.

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

34. வேற்றுமை அணி.

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. தன்கேடு பிற்பகல் கண்டுவிடும்

36. மரம் வளர்த்தால் நரகம் இல்லை

37. சோர்வு - சோம்பி இருக்கும் பண்பு அவர்களை ஒருகாலும் கிட்ட நெருங்காது.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக :** **1 × 3 = 3**

38. ''ஞாயிற்றை கைமறைப்பார் இல்''

*அல்லது*

''விளையும் பயிர் முளையிலேயே தெரியும்''

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும்'' எனத் தொடங்கும் பாடல்.

*அல்லது*

''பட்டங்கள் ஆள்வதும்'' என வரும் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

40. உழவின் மேன்மையைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.

41. பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகிறார் ?

*அல்லது*

இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. ''மாளிகை எடுத்தோர் மாடங்களைக் கட்டியோர்
தாளடிக்கீழ் சிக்கியோரும் என்மக்களே
வீதியிலே வீழ்ந்தோர் நாதியற்றுக் கிடந்தோர்
மனசுக்குள்ளே மருகுவோரும் என் மக்களே''.

*அல்லது*

''உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமையில்ல மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது''.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :** **(2 × 2 = 4) 1 × 4 = 4**

43. உலகியல் வாழ்வுக்குப் பொருள் வேண்டும். அந்தப் பொருள் அறத்தையும், இன்பத்தையும் தரவல்லது என்று கூறி நிலைத்த இன்பத்திற்கு வழிகாட்டுகிறார் வள்ளுவர். பொருள் சேர்க்கும் திறம் அறிந்து தீயவழியில் அல்லாமல் நல்ல வழியில் சேர்க்கப்பட்ட

பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும் என்பது பொருள். பொருள் பற்றி பேசும்போது நல்ல வழியில் பொருள் சேர்க்க வேண்டிய இன்றியமையாத தன்மையை வள்ளுவர் வலியுறுத்துகிறார். நாம் நினைக்கும் இன்பமும், நல்லறமும் அதில் அடங்கும் என அவர் விளக்குகிறார். தீய வழிகளில் வரும் செல்வம் கோடி கோடியாய்ச் சேர்த்தாலும் அதைத் தீண்ட கூட முடியாமல் தவிக்கின்ற மனிதர் பலரை நாம் பார்க்கின்றோம். இனிப்பான ஒன்றை உண்ணக்கூட முடியாமல் அமைதியாக உறங்கக் கூட முடியாமல் அல்லல் உறுவதை நாம் காண்கிறோம். தீய வழியில் வந்த செல்வம் தீய வழியில் செல்வது திண்ணம். நிலைத்த இன்பம் பெற தீதின்றி வந்த பொருள் தேவை என்று வாதாடுகிறார் வள்ளுவர்.

வினாக்கள் :

a) நிலைத்த இன்பம்பெற வள்ளுவர் கூறும் வழி யாது ?

b) தீய வழிகளில் வரும் செல்வம் என்ன செய்யக்கூடும் ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. நீ கண்டு மகிழ்ந்த புத்தக கண்காட்சி குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வசிக்கும் பகுதியில் ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கடிதம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக: $1 \times 5 = 5$**

45. ''தாய்மொழி வழிக்கல்வி''

*அல்லது*

''இயற்கையை பாதுகாப்போம்''

DO NOT WRITE ANYTHING HERE